சின்னச் சின்னதாய்...

முன்னாள் படைவீரர்களை சார்ந்தோர் சான்று பெற விண்ணப்பிக்கலாம்

● தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரை சார்ந்தோர்களுக்கு கல்வி நிலையங்களில் விண்ணப்பித்து பயன்பெற, சார்ந்தோர் சான்றை முன்னாள் படைவீரர் அலுவலகத்தை நேரில் அணுகி பெறலாம்.

மேலும், முன்னாள் படைவீரர் நலத்துறை இணையதள முகவரியில் exwel.tn.gov.in விண்ணப்பித்தும் சான்று பெறலாம். இதற்கு முந்தைய கல்வி ஆண்டுகளில் வழங்கப்பட்ட சான்றோர் சான்றிதழை, நடப்பு கல்வி ஆண்டுக்கு பயன்படுத்தக் கூடாது.

கல்விக் கடன் வட்டி மானியம், மத்திய அரசு மற்றும் மாநில அரசால் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை பெறுவது தொடர்பான விளக்க கையேடு பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தூத்துக்குடி முன்னாள் படைவீரர் நலன் உதவி இயக்குநரை நேரில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிலை பொருட்கள் விற்றவர் கைது

● கோவில்பட்டி

கயத்தாறு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் போலீஸார் நேற்று முன்தினம் வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது 5 சாக்கு பையுடன் மோட்டார் சைக்கிளில் வந்தவரை நிறுத்தி சோதனையிட்டனர். சாக்கு பையில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

விசாரணையில் அவர் வடக்கு இலந்தைகுளம் நடுத் தெருவைச் சேர்ந்த சுப்புராஜ் (47) என்பதும், புகையிலை பொருட்களை விற்பனைக்கு கொண்டு செல்வதும் தெரியவந்தது. இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிந்து, சுப்புராஜை கைது செய்து அவரிடமிருந்த சுமார் ரூ.1 லட்சம் மதிப்பிலான புகையிலை பொருட்கள், மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்தனர்.

குமரி மலையோரங்களில் மழை பேச்சிப்பாறை அணையில் மீண்டும் தண்ணீர் திறப்பு

● நாகர்கோவில்

குமரி மாவட்டத்தில் மலை யோரங்களில் மழை பெய்து வருவதை தொடர்ந்து பேச்சிப் பாறை அணையில் இருந்து மீண்டும் 535 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 10 நாட்களுக்கு மேலாக கனமழை பெய்து வந்த நிலையில், இரு நாட்களாக மழை நின்று வெயில் அடித்தது. அதே நேரம் நேற்று முன்தினம் மாலையில் இருந்து மலையோரப் பகுதிகளில் மழை பெய்தது. அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில் 43 மிமீ., மழை பெய்தது. பாலமோரில், மாம்பழத்துறையாறில் தலா 15 மிமீ. மழை பதிவானது.

மலையோரங்களில் பெய்து வரும் மழையை தொடர்ந்து பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர்மட்டம் 45.44 அடியாக உள்ள நிலையில், உள்வரத்தாக 589 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 535 கனஅடி தண்ணீர் வெளியேறி வருகிறது.

நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணையின் நீர்மட்டம் 14 அடியாக உயர்ந்துள்ளது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 60 அடியாக உள்ளது. நேற்றும் மாவட்டம் முழுவதும் விட்டு விட்டு மழை பெய்தது.

சூரங்குடி விபத்தில் மேலும் ஒருவர் மரணம்

● கோவில்பட்டி

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தை சேர்ந்த ரெங்கன் மகன் சிலம்பரசன் (35). இவர் குடும்பத்துடன் ஊர் ஊராக சென்று டிரை சைக்கிளில் பழைய பேப்பர், அட்டை மற்றும் பிளஸ்டிக் பாட்டில்கள் சேகரித்து அதனை தூத்துக்குடியில் உள்ள கடைகளில் விற்பனை செய்து வந்தார்.

இந்நிலையில் சிலம்பரசன் அவரது மனைவி தங்கம்மாள் (35), உறவினர் ஆறுமுகம் மனைவி மாரியம்மாள் (60), முருகன் மகன் சதீஷ் (7) ஆகியோர் கடந்த 26-ம் தேதி காலை சூரங்குடி அருகே உள்ள கீழ சண்முகபுரம் கிராமத்தில் பழைய பேப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் அட்டைகளை சேகரித்து கொண்டு கிழக்கு கடற்கரை சாலையை கடந்துள்ளனர்.

அப்போது அந்தவழியாக வந்த கார், சிலம்பரசன் ஓட்டி வந்த டிரைசைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் தங்கம்மாள், சதீஷ், மாரியம்மாள் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்தனர். சிலம்பரசன் மற்றும் காரில் வந்த 3 பேர் பலத்த காயமடைந்து, தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சிலம்பரசன் நேற்று உயிரிழந்தார். இது குறித்து சூரங்குடி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூத்துக்குடியிலிருந்து பாலக்காடு, மேட்டுப்பாளையத்துக்கு அறிவிக்கப்பட்ட

ரயில்களை விரைந்து இயக்க வேண்டும்

● தெற்கு ரயில்வே கூடுதல் பொதுமேலாளரிடம் மனு

● தூத்துக்குடி

ரயில்வே வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தூத்துக்குடி- பாலக் காடு, தூத்துக்குடி- மேட்டுப்பாளை யம் ரயில்களை விரைவாக இயக்க கோரி தூத்துக்குடி இந்திய தொழில் வர்த்தக சங்கம் மற்றும் பயணிகள் நலச்சங்கத்தினர் தெற்கு ரயில்வே கூடுதல் பொதுமேலாளரை நேற்று சந்தித்து மனு அளித்தனர்.

தூத்துக்குடி இந்திய தொழில் வர்த்தக சங்க தலைவர் டி.ஆர். கோடீஸ்வரன், தூத்துக்குடி மாவட்ட பயணிகள் நலச்சங்க செயலாளர் மா.பிரம்மநாயகம் ஆகியோர் சென்னை தெற்கு ரயில்வே அலுவலகத்தில், தெற்கு ரயில்வே கூடுதல் பொதுமேலாளர் கவுசல் கிஷோரை நேற்று நேரில் சந்தித்து அளித்த மனு விவரம்:

துறைமுக நகரமான தூத்துக் குடிக்கு போதிய ரயில் வசதி இல்லை. சென்னை மற்றும் மைசூர் ஆகிய இரு ரயில்களை தவிர நீண்ட தூர ரயில்கள் ஏதும் இல்லை. தூத்துக்குடிக்கு கூடுதல் ரயில் வசதி கேட்டு கடந்த 10 ஆண்டுகளாக மனு கொடுத்து வருகிறோம். ஆனால், எந்த பலனும் இல்லை.

பாலக்காடு- திருநெல்வேலி பாலருவி ரயிலை தூத்துக்குடி வரை நீட்டிப்பு செய்ய ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்து, அந்த ரயிலுக் கான புதிய எண் மற்றும் கால அட்டவணை வெளியிட்ட பிறகும் இதுவரை இயக்கப்படவில்லை. அதுபோல தூத்துக்குடி- மேட்டுப் பாளையம் இடையே வாரத்தில் மூன்று நாள் ரயில் இயக்க ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்தும் இது வரை இயக்கப்படவில்லை. இந்த இரு ரயில்களையும் உடனடியாக இயக்க வேண்டும்.

தூத்துக்குடி- சென்னை முத்து நகர் விரைவு ரயில் தினமும் காலை 7 மணிக்கு முன்பாக சென்னை சென்று சேரும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம்.

ஆனால், ரயில்வே நிர்வாகம் இந்த விஷயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது.

↑ சென்னையில் தெற்கு ரயில்வே கூடுதல் பொதுமேலாளர் கவுசல் கிஷோரை தூத்துக்குடி இந்திய தொழில் வர்த்தக சங்க தலைவர் டி.ஆர்.கோடீஸ்வரன், தூத்துக்குடி மாவட்ட பயணிகள் நலச்சங்க செயலாளர் மா.பிரம்மநாயகம் ஆகியோர் சந்தித்து மனு அளித்தனர்.

திருச்சி- காரைக்குடி- விருதுநகர் ரயிலை தூத்துக்குடி வரை நீட்டித்து திருச்சி- தூத்துக்குடி விரைவு ரயில் என்ற பெயரில் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் தூத்துக்குடி பயணிகள் திருநெல்வேலி- சென்னை வந்தே பாரத் ரயிலை விருதுநகர் சந்திப்பில் பிடிக்க வசதியாக இருக்கும்.

தூத்துக்குடி- மைசூர்- தூத்துக்குடி விரைவு ரயில் தினமும் காலை 9.30 மணிக்கு முன்பாக தூத்துக்குடி வந்து சேரும் வகையிலும், மாலை 5.30 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து கிளம்பி செல்லும் வகையிலும் நேரத்தை மாற்றி அமைக்க வேண்டும்.

தூத்துக்குடியில் இருந்து காலை 9.30 மணிக்கு புறப்பட்டு, மாலை 6.20-க்கு திரும்பி வரும் வகையில் தூத்துக்குடி- மதுரை இடையே இன்டர் சிட்டி ரயில் இயக்க வேண்டும். பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்க சென்னைக்கு கூடுதலாக ஒரு விரைவு ரயில் இயக்க வேண்டும்.

சென்னை எழும்பூர்- கொல்லம் அனந்தபுரி விரைவு ரயிலுக்கு கடம்பூர் ரயில் நிலையத்தில் நிறுத்தம் வழங்க வேண்டும். மணியாச்சி சந்திப்பில் புறவழி ரயில் வழித்தடம் அமைக்க வேண்டும். அனைத்து ரயில்களுக் கும் தூத்துக்குடி மேலூர் ரயில் நிலையத்தில் நிறுத்தம் வழங்க வேண்டும் என மனுவில் தெரி விக்கப்பட்டுள்ளது.

வருஷாபிஷேக விழாவை முன்னிட்டு

ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயிலில் கருட சேவை

● தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயிலில் வருஷா பிஷேகத்தை முன்னிட்டு கருட சேவை நடைபெற்றது.

நவ திருப்பதி கோயில்களில் முத லாவது கோயிலான ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்ற வைகாசி மாதம் திருவோணம் நட்சத் திர நாளன்று வருஷாபிஷேகம் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நேற்று முன்தினம் வருஷாபிஷேகம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு காலை 7 மணிக்கு விஸ்வரூபம், 8 மணிக்கு கும்பம் வைத்து ஹோமம் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு பூர்ணாஹுதி, 10.30 மணிக்கு சிறப்பு திருமஞ்சனம், 11 மணிக்கு தீபாராதனை, நாலாயிர திவ்ய பிரபந்த சேவை, 12 மணிக்கு சாற்று முறையை தொடர்ந்து பக்தர் களுக்கு தீர்த்தம், சடாரி, பிரசாதம் வழங்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு சாயரட்சைக்கு பின்னர் 6.30 மணிக்கு சுவாமி கள்ள பிரான் வாகன குறட்டுக்கு எழுந்தரு ளினார். இரவு 8.30 மணிக்கு கருட வாகனத்தில் சுவாமியை எழுந்தருளச் செய்து வீதி உலா நடைபெற்றது.

↑ ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயிலில் வருஷாபிஷேகத்தை முன்னிட்டு கருடசேவை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஸ்தலத்தார்கள் ராஜப்பா வெங்கடாச்சாரி, சீனிவாசன், தேவராஜன், நிர்வாக அதிகாரி கோவல மணிகண்டன், தக்கார் அருணாதேவி மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி அருகே

இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.30 லட்சம் பீடி இலை பறிமுதல்

● கோவில்பட்டி

தூத்துக்குடி அருகே இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.30 லட்சம் மதிப்பிலான பீடி இலைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு காவல் ஆய்வாளர் விஜய அனிதா தலைமையில் உதவி ஆய்வாளர் ஜீவமணி தர்மராஜ் மற்றும் போலீ ஸார் தூத்துக்குடி பகுதியில் அதிகாலை 12.15 மணியளவில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தூத்துக்குடி அருகே தருவைகுளம் கடற்கரைக்கு செல்லும் உப்பளபாதையில் வந்த சரக்கு வேனை போலீஸார் மறித்து சோதனை செய்தனர்.

அந்த வேனில் பீடி இலை மூட்டை கள் இருந்தன.

வேனில் இருந்தவர்கள் தப்பி ஓடி விட்டனர். பீடி இலை மூட்டைகளை படகு மூலம் இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது. வேனில் இருந்த தலா 30 கிலோ எடை கொண்ட 62 மூட்டைகளில் இருந்த ரூ.30 லட்சம் மதிப்புள்ள 1,860 கிலோ பீடி இலைகள் மற்றும் சரக்கு வேனை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக கியூ பிரிவு போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மஹிந்தரா டவர்ஸ், P K குர்னி சவ்க், வெர்லி, மும்பை-400 018, மஹாராஷ்ட்ரா, இந்தியா. Tel:+91 22 66523500, Email id: customercare.mrhfl@mahfin.com, Website – www.mahindrahomefinance.com

பிராந்திய அலுவலகம்: எண்.9/3, முதல் மற்றும் இரண்டாவது தளம், சக்தி எஸ்டேட்ஸ், 3வது தெரு, MG ரோடு, ஆவாரம்பாளையம், கோயம்புத்தூர்-641006.

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

See rule 8(1) of the Security Interest (Enforcement) Rules, 2002

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச்சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 ன் (Securitisation and Mahindra Rural Housing Finance Limited Assets and Enforcement of Security Interest Act, 2002-ன்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட M/s.மஹிந்திரா ரூரல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 3-ன்படி **கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன் பெற்றவர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன் பெற்றவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின்படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை கீழ்வரும் தேதிகளன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவர் மற்றும் பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **M/s.மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்,** வந்து சேர வேண்டிய **கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும்,** அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

வ.எண்.1: (சங்கரன்கோயில் கிளை) கடன் கணக்கு எண்.XRESSKK01024109; கடன்தாரர்கள்/சக கடன்தாரர்கள் /ஜாமீன்தாரர்கள்: P.சண்முகதாய், I.பொன்னிருளன் மற்றும் A.ராஜேந்திரன்; கோரிக்கை அறிவிப்பு தேதி: **06.11.2023**; கடன் நிலுவைத்தொகை: **₹2,46,839/-** மற்றும் வட்டி, இதர செலவுகள். **சுவாதீனம் எடுத்த தேதி: 25.05.2024**

அசையா சொத்து விபரம்: சேவல்குளம் 627754 என்னும் முகவரியில் உள்ள **சொத்து,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும்.

வ.எண்.2: (ராஜபாளையம் கிளை) கடன் கணக்கு எண்.XRESRPM01070542; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: M.காளிராஜ், M.வேலுதாய் மற்றும் V.ராம்ராஜ்; கோரிக்கை அறிவிப்பு தேதி: **09.02.2023**; கடன் நிலுவைத்தொகை: **₹1,42,948/-** மற்றும் வட்டி, இதர செலவுகள். **சுவாதீனம் எடுத்த தேதி: 30.05.2024**

அசையா சொத்து விபரம்: தென்காசி பதிவு மாவட்டம், வாசுதேவநல்லூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட **SF எண்.1100/5H2, நாரணபுரம் பகுதி I கிராமம்** என்னும் முகவரியில் **432.0 சதுர அடி காலி மனை,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: காளியப்பன் மனை, தெற்கு: குருசாமி மனை & கிழக்கு மேற்கு வழிப்பாதை, கிழக்கு: காளிமுத்து மனை, மேற்கு: வேல்சாமி மனை.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

தேதி : 25.05.2024 / 30.05.2024 M/s.மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME

I, MARIYA KALA, W/o. JOHNSAN, born on 26-02-1982 residing at No: - 5/3350, Rajiv Gandhi Nagar, Thangachimadam, Pamban, Ramanathapuram – 623 529 shall henceforth be known as KALA.

MARIYA KALA

Ramanathapuram, 29th May 2024.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர் கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

AU SMALL FINANCE BANK

Registered Office : 19-A Dhuleshwar Garden, Jaipur, Rajasthan, India, 302001.
www.aubank.in

LOAN AGAINST GOLD - AUCTION NOTICE ON "AS IS WHERE IS" BASIS

The below mentioned borrower/s have been issued notices to pay their outstanding amounts towards the loan against gold facilities availed from AU Small Finance Bank Limited ("Bank"). Since the borrower/s has/have failed to repay his/their dues, we are constrained to conduct an auction of pledged gold items/articles on **06 Jun 2024 between 11:00 AM - 3:00 PM (Time)** at below mentioned branches according to the mode specified therein. In the case of deceased borrowers, all conditions will be applicable to legal heirs. Please note that in the event of failure of the above auction, the bank reserves its right to conduct another auction without prior intimation.

E-Auction Branch Details (E-auction will be conducted by using Weblink https://gold.samil.in)

ALANGAYAM - 23660001558212 23660001640317 | **ARAKONAM - SWAL PET** - 23660001462922 | **ARANTHAGI** - 23660001468931 | **CHENGAM** - 23660001498513 23660001518378 23660001955744 | **CHENNAI - ANNA NAGAR** - 23660001535045 | **CHIDAMBARAM** - 23660001506231 23660001544758 23660001551784 23660001591128 | **CHINNAMANUR** - 23660001493673 23660001528229 23660001546774 23660001549329 23660001549439 23660001580609 23660001604776 23660001690892 23660001909263 | **COIMBATORE - R S PURAM** - 23660001514195 | **ERODE - PERUNDURAI ROAD** - 23660001505103 | **GINGEE** - 23660001513027 23660001550636 | **GUDIYATHAM THYALAYARTN BAZAARSTREET** - 23660002136039 | **HOSUR** - 23660002083147 | **KALLAKURCHI** - 23660001506761 24660000536999 | **KANCHIPURAM - ENNAIKARA STREET** - 23660001532751 23660001577035 23660002138265 | **KARAIKAL** - 23660001471504 23660002147408 | **KRISHNAGIRI** - 23660001568833 | **KUMBAKONAM** - 23660001487324 | **LALGUDI** - 23660001551754 23660001637743 23660002164235 | **MADATHUKULAM** - 23660001681619 | **MADURAI** - 23660001473941 | **MADURAI - SIMAKKAL** - 23660001537312 23660001802833 23660001939465 | **MADURANTHAKAM** - 23660002123223 | **MANACHANNALLUR** - 23660001538010 23660002100557 23660002145492 | **MANNARGUDI** - 23660001498613 23660001525534 23660001609017 | **NAGAPATTINAM** - 23660001578073 23660001616733 | **NEEDAMANGALAM** - 23660001520563 | **PALANI** - 23660001513407 23660001535365 23660001550476 23660001567184 23660001567234 23660001567324 23660001567424 | **PAPANASAM** - 23660001530574 23660001530584 | **PATTUKOTTAI** - 23660001484940 23660001514245 23660001523828 23660001645178 | **PERAVURANI** - 23660001483082 | **PERIYAKULAM** - 23660001376573 23660001468411 23660001541513 23660001542932 23660001560347 23660001733603 23660001881843 24660000300224 | **PUDUCHERRY - BHARATHI STREET** - 23660001467213 23660001527561 23660001533319 | **PUDUKKOTTAI** - 23660001561135 23660001575789 23660001575959 | **RAJAPALAYAM** - 23660001524856 | SANKARAPURAM - 23660001616553 | **SEMPATTI** - 23660002126798 | **SIRKAZHI** - 23660001526983 23660002139063 23660002179557 | **SRIMUSHNAM** - 23660001477393 | **SRIPERUMBUDUR CHENNAI BANGALOREROAD** - 23660001778107 | **THANJAVUR - PUDUKKOTTAI MAIN ROAD** - 23660002158607 | **THIRUCHIRAPALLI - PON NAGAR** - 23660001511151 23660001516842 23660001538230 23660001538710 23660001569981 23660001571806 23660001605544 | **THIRUVALUR - KAKKALUR VILLAGE** - 23660001569301 23660001576067 | **THIRUVARUR** - 23660001473581 23660001507489 23660002112814 | **THOOTHUKUDI** - 23660001580189 23660001580389 23660001941581 | **TINDIVANAM** - 23660001574931 | **VANIYAMBADI** - 23660001559230 | **VEDARANYAM** - 23660001493213 | **VELLORE** - 23660001513807 | **VELLORE - MUTHANNA NAGAR** - 23660001524236 | **VIRUDHACHALAM** - 23660001477843 23660001505443 23660001546144 23660001558452 23660001579442 23660001756989 |

Note: The auction is subject to certain terms and conditions mentioned in the bid form, which is made available before the commencement of auction.

Sd/-
Manager
AU Small Finance Bank Limited

SBI பாரத ஸ்டேட் பாங்கு

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை,
விநாயக நகர் கிளை முதல் தளம்,
எண்.8, அம்பேத்கர் சாலை, மதுரை – 625020.

ஏல விற்பனை அறிவிப்பு - அசையும் சொத்துக்களுக்கானது

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) விதிகள் 2002, உரிமை அமலாக்க சட்ட விதி 8(6)-ன் கீழ் ஏல அறிவிப்பு. இதன் மூலம் பொது மக்கள் மற்றும் குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், பாரத ஸ்டேட் வங்கியின் கடன்தாரரான **1) திருமதி.மாரியம்மாள் உத்தண்டராமன்,** உரிமையாளர் – **M/s. கிரீன் சிக்னல் டிரான்ஸ்போர்ட்,** ஃப்ளாட் எண்.3A, டாக்டர்.அம்பேத்கர் 1-வது தெரு, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்–627756. **2) M/s. கிரீன் சிக்னல் டிரான்ஸ்போர்ட்,** ஃப்ளாட் எண்.3A, டாக்டர்.அம்பேத்கர் 1-வது தெரு, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்–627756 ஆகியோரிடமிருந்து 28.05.2024 தேதிப்படி **ரூ.96,41,671/-** (ரூபாய் தொன்னூற்று ஆறு லட்சத்து நாற்பத்தொன்றாயிரத்து அறுநூற்று எழுபத்தொன்று மட்டும்) + வட்டி, செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, பாரத ஸ்டேட் வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் அசையும் சொத்துக்களை **"எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே"** என்ற அடிப்படையில் **20.06.2024** அன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அசையும் சொத்துக்களின் விவரம் : ஐட்டம் எண்.1 : Property ID: SBIN90916656394A - Name of the Borrower :Smt.Mariammal Uthandaraman, Make : Tata Motors Ltd, Model :Prima 3525 TK EBSVI, 238OX, Registration No : TN 79 K 4599, Fuel used : Diesel, Date and Year of Registration :09/05/2022, Chassis No : MAT809009N3B03924, Engine No:B6 7B6A250D06222A64185677, External Colour :Skool Yellow, Seating Capacity :2, Horse Power & Cubic Capacity : 250 & 6692, Life Span : 8 years, Further Life Expected :7 years. (GST applicable).
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 28,35,000/– முன்வைப்புத் தொகை : ரூ. 2,83,500/– ஏல உயர்வு : ரூ.50,000/–

ஐட்டம் எண்.2 : Property ID SBIN9091665639B - Name of the Borrower :SmtMariammal Uthandaraman, Make : Tata Motors Ltd, Model :Prima 3525 TK EBSVI, 238OX, Registration No : TN 79 K 4499, Fuel used : Diesel, Date and Year of Registration : 09/05/2022, Chassis No : MAT809009N3B03769, Engine No:B6 7B6A250D06222B64191542, External Colour : Skool Yellow, Seating Capacity :2, Horse Power & Cubic Capacity : 250 & 6692, Life Span : 8 years, Further Life Expected :7 years. (GST applicable).
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. ரூ. 28,35,000/– முன்வைப்புத் தொகை : ரூ. 2,83,500/– ஏல உயர்வு : ரூ.50,000/–

விருப்பமுள்ள ஏலதாரர் முன்வைப்புத் தொகையை ஆதாரங்களுடன் மின்னணு ஏலம் முடிவதற்கு முன் MSTC போர்டலில் சமர்ப்பிக்க வேண்டும்.

இ-ஏல தேதி & நேரம் : 20.06.2024 காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை (விற்பனை முடியும் வரை 10 நிமிட தானியங்கி கால நீட்டிப்புடன் நடைபெறும்)

சொத்துக்களை **13.06.2024** அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை பார்வையிடலாம்.

மேற்படி வாகனங்கள் **அழகேசன் பார்க்கிங் இன், அச்சம்பத்து, மதுரை–625016**–ல் நிறுத்தப்பட்டுள்ளது.

சொத்து குறித்து விவரங்கள் அறிவதற்கான மொபைல் எண். **97904 44548**

ஏல விற்பனையானது ஆன்லைனில் **https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp** என்ற இணைய முகவரியில் மின்னணு முறையில் நடைபெறும். மின்னணு ஏல விற்பனை நடைமுறைகளை ப்ராசஸ் செய்வதற்கு 2 முதல் 3 வேலை நாட்கள் தேவைப்படுகின்ற காரணத்தினால், ஏலதாரர்கள் தங்களது விண்ணப்ப பதிவினை ஏலத் தேதிக்கு முன்னதாகவே பதிவு செய்திருக்க வேண்டும். விரிவான ஏல விற்பனை விதிகள் & நிபந்தனைகள், ஆன்லைன் டெண்டர் விண்ணப்பங்கள், டிக்ளரேஷன் மற்றும் பிற விவரங்களுக்கு **https://ibapi.in & https://bank.sbi** -ல் அறிந்து கொள்ளலாம்.

நாள் : 28.05.2024 **அங்கீகாரம் பெற்ற அதிகாரி,**
இடம் : மதுரை பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, மதுரை.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் அருகில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில்-629001.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	08.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1658210090000002 1. Mr. முத்துகுமார் L, 2. Mr.லஷ்மண பெருமாள் 3. Mrs. பாமா L	(i) 05.02.2022 & 04.02.2022 அன்றுள்ளபடி ரூ.31,60,694/- (ரூபாய் முப்பத்தோரு லட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு) (ii) அடையாளபூர்வ சுவாதீனம்: 14.07.2022 நேரடி சுவாதீனம்: 16.11.2022	ரூ.50,20,552/- (ரூபாய் ஐம்பது லட்சத்து இருபதாயிரத்து ஐநூற்று ஐம்பத்து இரண்டு மட்டும்)	ரூ.8,50,000/- (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்).	ரூ.85,000 /- (ரூபாய் எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்)

சொத்து விவரம் : கொட்டாரம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.2396, மறு சர்வே எண்.339/6, பட்டா எண்.4456, **தாமரைகுளம் கிராமம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 6 செண்ட் நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் அனைத்து இதர அனுபந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: சுவாமி தாஸ்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: வழிப்பாதை, வடக்கு: வழிப்பாதை, தெற்கு: பால்வர்ணன்-க்கு சொந்தமான தெற்கு பகுதி பங்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 26.06.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **25.06.2024** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **24.06.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன் - Mob: 95512 77444 / Mr.கிருபாகர் - Mob: 94455 08743

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT. LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob. No. 74182 81709**)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT. LTD., Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
தேதி: 31.05.2024 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
இடம்: பெங்களூர் **உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).